## August 22, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி) நடைமுறை யின்கீழ் விதிக்கப்படும் 12%, 28% வரி விகிதங்களை நீக்க மாநில நிதியமைச் சர்கள் குழு (ஜிஓஎம்) ஒப்புதல் அளித்தது.
    i. தற்போது நடைமுறையில் உள்ள 5%, 12%, 18%, 28% ஆகிய 4 ஜிஎஸ்டி விகிதங்களை 5%, 18% என இரண்டாக குறைக்கவும் புகையிலை, குட்கா மற்றும் பான் மசாலா உள்ளிட்ட 7 பொருள்கள் மீது மட்டும் 40 % வரி விகிதத்தைக் கடைப்பிடிக்கவும் ஜிஎஸ்டி பகுப்பாய்வுக் குழுவுக்கு நிதியமைச்சகம் கடந்த வாரம் பரிந்துரைத்தது.
    ii. ஜிஎஸ்டி விகித பகுப்பாய்வு, மருத்துவ மற்றும் ஆயுள்காப்பீடு பிரிமீயத்துக்கு ஜிஎஸ்டி விலக்கு குறித்த பரிந்துரைகளை வழங்குவதற்காக அமைக்கப்பட்ட இரண்டு குழுக்களின் ஒருங்கிணைப்பாளராக பிகார் துணை முதல்வர் சாம்ராட் சௌதரி உள்ளார். இழப்பீட்டு வரி குறித்த பரிந்துரை வழங்கும் குழுவின் ஒருங்கிணைப்பாளராக மத்திய நிதித் துறை இணையமைச்சர் பங்கஜ் சௌதரி உள்ளார்.
    iii. அடுத்த மாதம் நடைபெறும் ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டால் மட்டுமே இந்த முன்மொழிவுகள் அமலுக்கு வரும் என்பதால், அந்தக் கூட்டத்தில் தங்களது குறைகளை எடுத்துக் கூற எதிர்க்கட்சியினர் திட்டமிட்டு வருகின்றனர்.
    iv. தற்போது பால், முட்டை, தயிர், உப்பு உள்ளிட்ட முக்கிய உணவு சார்ந்த பொருள்களுக்கு ஜிஎஸ்டியில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. தினசரி பயன்படுத்தும் சர்க்கரை, தேநீர் போன்ற பொருள்களுக்கு 5%, வெண்ணெய், நெய், கைப்பேசி போன்ற பொருள்களுக்கு 12%, சோப்பு, தேங்காய் எண்ணெய், ஐஸ்கிரீம் போன்ற பொருள்களுக்கு 18%, தொலைக்காட்சி, குளிர்பதன பெட்டி (ப்ரிட்ஜ்) மற்றும் குளிரூட்டிகள் (ஏசி) போன்ற பொருள்களுக்கு 28% ஜிஎஸ்டி விதிக்கப்படுகிறது.
    v. இந்நிலையில், மறுசீரமைக்கப்பட்ட ஜிஎஸ்டி விகிதத்துக்கு ஜிஎஸ்டி கவுன்சில் ஒப்புதல் அளித்தவுடன் 12%-இன்கீழ் வரி விதிக்கப்பட்டுவரும் 99 சதவீத பொருள்கள் 5%க்குள் கொண்டுவரப்படவுள்ளன.
    vi. அதேபோல் 28%-இன்கீழ் வரி விதிக்கப்படும் 90 சதவீத பொருள்கள் 18% வரி விதிப்புக்குள் கொண்டுவரப்படவுள்ளன.
    vii. இதனால் பொதுமக்கள் தினசரி பயன்படுத்தும் பொருள்களின் விலை கணிசமாக குறைந்து, மக்களிடம் பணப்புழக்கம் அதிகரித்து நுகர்வை அதிகரிக்கும். அதேபோல் சிறுதொழில்கள் மற்றும் புத்தாக்க நிறுவனங்கள் எளிமையான வணிகம் புரிய வழிவகுக்கும்.
2. தீவிர குற்றப் புகாரில் கைது செய்யப்பட்டு 30 நாள்கள் காவலில் வைக்கப்படும் பிரதமர், மாநில முதல்வர்கள் மற்றும் அமைச்சர்களைப் பதவியிலிருந்து நீக்கம் செய்வதற்கான மூன்று மசோதாக்களை நாடாளுமன்ற கூட்டுக் குழுவுக்கு பரிந்துரைப்பதற்கான தீர்மானத்துக்கு மாநிலங்களவை ஒப்புதல் அளித்தது.

i. முன்னதாக, மக்களவையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட நிலையில் தற்போது மாநிலங்களவையிலும் ஒப்புதல் அளிக்கப்பட்டது.
ii. இந்த மசோதாக்களை நாடாளுமன்ற கூட்டுக் குழுவுக்கு பரிந்துரைப்பதற்கான தீர்மானத்தை எதிர்க்கட்சியினரின் கடும் அமளிக்கு மத்தியில் அமித் ஷா மாநிலங்களவையில் முன்மொழிந்தார். தீர்மானத்துக்கு மாநிலங்களவை ஒப்புதல் அளித்தது.
iii. அடுத்த நாடாளுமன்ற கூட்டத்தொடரின் முதல் வாரத்தின் கடைசி நாளில் இந்தக் குழு தனது அறிக்கையைச் சமர்ப்பிக்க பணிக்கப்பட்டுள்ளது.
iv. நவம்பர் மூன்றாவது வாரத் தில் அடுத்த கூட்டத்தொடர் (குளிர்கால கூட்டத்தொடர்) தொடங்க வாய்ப்புள்ளதாகத் தெரிகிறது.

3. காலை உணவுத் திட்டம்' நகரங்களில் உள்ள அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கும் விரிவாக்கம் செய்யப்படவுள்ளது. இத்திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின், சென்னையில் ஆக. 26-ஆம் தேதி தொடங்கி வைக்கிறார்.
   i. அரசுப் பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் திட்டம் கடந்த 2022-ஆம் ஆண்டு செப். 15-ஆம் தேதி மதுரையில் தொடங்கப்பட்டது. பெரும் வரவேற்பைத் தொடர்ந்து, இந்தத் திட்டம் திருவாரூர் மாவட்டம், திருக்குவளையில் நடைபெற்ற அரசு நிகழ்வில் விரிவாக்கம் செய்யப்பட்டது. இதன் மூலம் ஒட்டுமொத்தமாக 30,992 பள்ளிகளில் பயிலும் 18.50 லட்சம் மாணவர்கள் பயன்பெற்று வருகின்றனர்.
   ii. காலை உணவுத் திட்டத்தால் பள்ளிக்கு வரும் மாணவ, மாணவிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதுடன் குழந்தைகளின் கற்றல் திறனும் மேம்படுத்தப்பட்டுள்ளது.

4. கர்நாடக கூட்ட நெரிசல் கட்டுப்பாட்டு (நிகழ்ச்சி கள் மற்றும் மக்கள் கூடும் இடங் களில் கூட்டத்தை நிர்வகித்தல்) சட்ட மசோதா-2025 பேரவையில் அறிமுகம் செய்யப்பட்டது.
   i. மக்கள் அதிகம் கூடும் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வோர், அக்கூட்டத்துக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் முன்அனுமதி பெற வேண்டும். 7,000-க்கும் குறைவான எண்ணிக்கையில் மக்கள் கூடும் நிகழ்ச்சிக்கு காவல் நிலையத்தின் பொறுப்பாளர் அனுமதி அளிக்கலாம்.
   ii. ஏழாயிரம் பேருக்கு அதிகமாகவும் 50 பேருக்கும் குறைவான எண்ணிக்கையில் மக்கள் திரள்வதாக இருந்தால் காவல் துணை கண்காணிப்பாளரிடம் அனுமதி பெற வேண்டும். 50,000-க்கு அதிகமான மக்கள் கூடுவதாக இருந்தால் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அல்லது மாநகர காவல் ஆணையரிடம் உரிய விண்ணப்பத்தைச் அளித்து, முன்அனுமதி பெறலாம்.
   iii. இந்தவிதிகளை மதிக்காமல்,மக்கள் திரளக்கூடிய நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வோருக்கு 3 முதல் 7 ஆண்டுகள் சிறை அல்லது ரூ.1 லட்சம் அபராதம் விதிக்க புதிய சட்ட மசோதாவில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

iv. இந்த சட்ட மசோதா மூலம் அரசியல்கட்சிகளின் கூட்டங்களுக்கு நெருக்கடி தர அரசு நினைப்பதா கவும் எதிர்க்கட்சியினர் குற்றஞ் சாட்டினர்.

5. நாடாளுமன் றத்தில் நிறைவேற்றப்பட்ட புதிய விளையாட்டு மசோதாவின் அடிப்படையில் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் (பிசிசிஐ) தேர்தல்கள் நடத்தப்படவேண்டும் என மத்திய விளையாட்டு அமைச்சகம் எதிர்பார்த்துள்ளது.

i. மத்திய அரசு அனைத்து விளையாட்டு சம்மேளனங்களையும் நெறிப்படுத்தும் வகையில் புதிய மசோதாவை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியது. ஆனால் புதிய சட்ட விதிமுறைகள் இன்னும் அரசிதழில் வெளியிடப்படவில்லை.

ii. புதிய மசோதாவின் கீழ் பிசிசிஐயும் கொண்டு வரப்பட்டுள்ளது. வரும் செப்டம்பர் மாதம் பிசிசிஐ நிர்வாகிகள் தேர்தல் நடைபெறவுள்ளது.

iii. உச்சநீதிமன்றம் நியமித்த நீதிபதி லோதா குழு பரிந்துரையின்படி பிசிசிஐ தேர்தல்களை நடத்தலாம். புதிய விளையாட்டு மசோதா நெறிமுறைகள் அமலுக்கு வரும் பட்சத்தில் தேர்தல் அதன்படி நடைபெற வேண்டும் என விளையாட்டு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

6. பணம் செலுத்தி விளையாடப்படும் இணையவழி சூதாட்ட விளையாட்டுகளுக்குத் தடை விதிக்கும் 'இணையவழி விளையாட்டு மேம்பாட்டு மற்றும் ஒழுங்கு முறை சட்டமசோதா 2025' மாநிலங்களவையில் குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேறியது.

i. இணையவழி பண விளையாட்டுகள் மூலம் ஏற்படும் நிதி மோசடிகள், பணப் பரிவர்த்தனை குற்றங்கள் மற்றும் மக்களின் நிதி இழப்பைத் தடுக்கும் நோக்கில் கொண்டு வரப்பட்ட இந்த மசோதா, மக்களவையில் ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டுள்ளது.

ii. அந்தவகையில் இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்ட இந்த மசோதா, தற்போது குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்படும். குடியரசுத் தலைவரின் ஒப்புதல் கிடைத்ததும், இது சட்டமாக நடைமுறைக்கு வரும்.

iii. இதன்மூலம், இணையவழியில் பணம் வைத்து விளையாடப்படும் போக்கர், ரம்மி, சூதாட்டம், லாட்டரி, பந்தயம் போன்ற அனைத்து விளையாட்டுகளும் சட்டவிரோதமாக்கப்படும். மற்ற இணையவழி விளையாட்டுகள் மற்றும் கல்விசார், திறன்மேம்பாட்டு விளையாட்டுகள் அங்கீகரிக்கப்பட்டு, ஒழுங்குபடுத்தப்படும்.

iv. கிட்டத்தட்ட 45 கோடி மக்கள் இந்த விளையாட்டுகளால் பாதிக்கப்பட்டுள்ளனர். நடுத்தர குடும்பங்கள் கஷ்டப்பட்டு சம்பாதித்த ரூ.20,000 கோடிக்கும் அதிகமான பணம் வீணாகியுள்ளது.

v. உலக சுகாதார அமைப்பின் ஆவணத்தில் இணையவழி விளையாட்டுகளுக்கு அடிமையாவது ஒரு நோய் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

7. நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடரில் எதிர்க்கட்சிகளின் அமளி மற்றும் வெளிநடப்புக்கு இடையே நாடா ளுமன்ற இரு அவைகளிலும் 12 மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.
   i. கோவா பேரவையில் பழங்குடியினர் இடஒதுக்கீடு மசோதா,
   ii. வணிக கப்பல் போக்குவரத்து மசோதா,
   iii. மணிப்பூர் சரக்கு-சேவை வரி (திருத்த) மசோதா,
   iv. மணிப்பூர் நிதி ஒதுக்கீட்டு மசோதா,
   v. தேசிய விளையாட்டு நிர்வாக மசோதா,
   vi. தேசிய ஊக்கமருந்து தடுப்பு (திருத்த) மசோதா,
   vii. வருமான வரி மசோதா,
   viii. வரி விதிப்பு சட்டங்கள் (திருத்த) மசோதா,
   ix. இந்திய துறைமுகங்கள் மசோதா,
   x. சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (மேம்பாடு- ஒழுங்குமுறை) திருத்த மசோதா,
   xi. ஐஐஎம் (திருத்த) மசோதா,
   xii. இணையவழி விளையாட்டு ஊக்குவிப்பு மற்றும் ஒழுங்குமுறை மசோதா
8. உத்தரகண்டில் உள்ள லிபுலேக் கண வாய்க்கு நேபாளம் உரிமை கோரியுள்ளதை இந்தியா திட்டவட்டமாக நிராகரித் துள்ளது.
   i. இந்தியா-சீனா எல்லை விவகாரம் குறித்து பேச்சு வார்த்தை நடத்த சீன வெளியுறவு அமைச்சர் வாங் யி 2 நாள் பயணமாக அண்மையில் இந்தியா வந்தார்.
   ii. அப்போது இந்தியா- சீனா இடையே லிபுலேக் கணவாய், ஷிப்கி லா கணவாய் மற்றும் நாதுலா கணவாய் வழியாக எல்லை தாண்டிய வர்த்தகத்தை மீண்டும் தொடங்க இருதரப்பும் தீர்மானித்தன. இதில் லிபுலேக் கணவாய் உத்தரகண்டில் உள்ளது.
   iii. இந்நிலையில் லிபுலேக் கணவாய் வழியாக எல்லை தாண்டிய வர்த்தகத்தை தொடங்க இந்தியா-சீனா முடிவு செய்ததற்கு நேபாள வெளியுறவு அமைச்சகம் ஆட்சேபம் தெரிவித்தது. நேபாளத்தின் பிரிக்க முடியாத பகுதியாக அந்தக் கணவாய் இருப்பதாக அந்த அமைச்சகம் குறிப்பிட்டது.
   iv. கடந்த 1954-ஆம் ஆண்டு இடையே இந்தியா-சீனா லிபுலேக் கணவாய் வழியாக எல்லை தாண்டிய வர்த்தகம் தொடங்கி, பல ஆண்டுகளாக நீடித்து வந்தது. கரோனா பரவல் மற்றும் பிறசம்பவங்களால் அந்தக் கணவாய் வழியாக நின்றுபோன வர்த்தகத்தை மீண்டும் தொடங்க தற்போது முடிவு செய்யப்பட்டுள்ளது.
   v. லிபுலேக் கணவாய்க்கு நேபாளம் உரிமை கோருவதற்கு சரியான காரணமோ, வரலாற்று ரீதியான ஆதாரமோ இல்லை. நிலப்பகுதிகளுக்கு தன்னிச்சையாக உரிமை கோரி பெரிதுபடுத்துவதை ஏற்க முடியாது.
   vi. ஏற்கெனவே உத்தரகண்டில் உள்ள காலாபானி, லிம்பியதுரா, லிபுலேக் பகுதிகளை நேபாளத்தைச் சேர்ந்த பகுதிகள் என்று அந்நாடு கடந்த 2020-

ஆம் ஆண்டு வரைபடம் ஒன்றை வெளியிட்டது. அதை இந்தியா திட்டவட்டமாக நிராகரித்தது குறிப்பிடத்தக்கது.

9. இந்திய பொருள்கள் மீது அமெரிக்கா 50 சதவீதம் வரி விதித்துள்ளதற்கு சீனா எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.
    i. அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் சில இந்திய பொருள்கள் மீது அந்நாடு 25 சதவீத வரி விதிக்கும் நடைமுறை அண்மையில் அமலுக்கு வந்தது.
    ii. இந்த 25 சதவீதத்துடன் ரஷியாவிடம் இருந்து இந்தியா கச்சா எண்ணெய் இறக்குமதி செய்வதற்கு அதிருப்தி தெரிவித்து, இந்திய பொருள்கள் மீது கூடுதலாக 25 சதவீத வரியை அமெரிக்க அதிபர் டிரம்ப் விதித்தார்.
    iii. இந்தக் கூடுதல் வரி விதிப்பு ஆக.27-ஆம் தேதி அமலுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன்மூலம், இந்திய பொருள்கள் மீதான அமெரிக்காவின் வரி விதிப்பு 50 சதவீதமாக அதிகரிக்கும்.